# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

## ஆணை நாள் – 08.04.2026

**முன்னிலை**

**திரு மு. நடேசன், எம்.எஸ்சி., எல்.எல்.பி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.2730/C/2024

திரு T. பாலாஜி .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம், .. பொது அதிகார அமைப்பு
திருநெல்வேலி மாவட்டம் - 627 401.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 11.10.2023 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 27.10.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 20.11.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.03.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (08.04.2026) இவ்வாணையத்தில் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு T. பாலாஜி என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு இரா. பிரசாத், கண்காணிப்பாளர், வன உயிரினக்காப்பாளர் அலுவலகம், புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம் என்பவர் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், அம்பாசமுத்திரம், புலிகள் காப்பகம், வன உயிரினக் காப்பாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அகஸ்தியர் அருவிக்கு செல்லும் சாலையினை சீரமைக்கக்கோரி தங்கள் அலுவலகத்திலிருந்து எந்தெந்த அலுவலகங்களுக்கு எந்தெந்த தேதிகளில் கடிதம் அனுப்பியுள்ளீர்கள் என்பது பற்றிய விவரம், அவ்வாறு அனுப்பப்பட்ட

கடிதத்திற்கு வரப்பெற்ற பதில்கள் பற்றிய விவரம், தங்களது அலுவலக கடித ந.க.எண்.வ/1435/2020 நாள் 10.06.2020 எந்த அலுவலகத்திலிருந்து எந்த அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது பற்றிய விவரம், சொரிமுத்து அய்யனார் கோவில் விலக்கிலிருந்து சொரிமுத்து ஐயனார் கோவில் வரை சாலை வசதி எத்தனை வருடங்களாக சரிய செய்யப்படாமல் உள்ளது அது தொடர்பாக தங்கள் அலுவலகம் என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்பது பற்றிய விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 14 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (08.04.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.E3/6383/2023 நாள் 27.10.2023 மற்றும் ந.க.எண்.ப1/7178/2023-2 நாள் 06.03.2025 ஆகிய தேதிகளிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரின் வாயிலாக தனக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறான தகவல்கள் இல்லையென்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

*6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கோரியுள்ள தகவல்களானது கோரிக்கை வடிவிலும் மற்றும் வினா வடிவிலும் உள்ளதால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(f)-ன்கீழ் பொது அதிகார அமைப்பின் இருப்பில் உள்ள ஆவணங்களின் தகவல்களை மட்டுமே கோரிப் பெற இயலுமே தவிர, கேள்விகள், கோரிக்கைகள் ஆகியவை தகவல் என்னும் வரையறையில் வராது என மனுதாரருக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களை இனம் வாரியாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்தில்* ***20.05.2026*** *அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய தகவல்கள் வழங்காமல் தவறான தகவல்களை வழங்கி மனுதாரருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்திய காரணத்தினால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி, மனுதாரருக்கு இழப்பீடாக (வரைவோலையாக) ரூ.<u>10,000/-</u> (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், புலிகள் காப்பகம், துணை இயக்-குநர் வனஉயிரினக்காப்பாளர் அலுவலகம் என்ற பொது அதிகார அமைப்பிற்கு இவ்வாணையத்தின் வாயிலாக உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான இரசீதின் நகலினை* ***<u>20.05.2026</u>*** *அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மு. நடேசன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.2730/C/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
வன உயிரினக்காப்பாளர் அலுவலகம்,
புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 401.

**<u>வழக்கு எண்.SA.2730/C/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு T. பாலாஜி, த/பெ. திருமலைக்கொழுந்து,
எண்.32B, காந்திநகர் வடக்குத்தெரு,
விக்கிரமசிங்கபுரம்.

Copy to: File
SNPS / 09.04.2026